පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව සබරගමුව - සති පාසල

විෂය:- දෙවන බස දෙමළ

සතිය:-

ශ්‍රේණිය : 11

කෑගල්ල අධ්‍යාපන කලාපය

**பின்வரும் உரை பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பூரணமான விடை எழுதுக**

පහත චේතියේ කියවා පහත සඳහන් ප්‍රශ්න වලට සම්පූර්ණ වකින් පිළිතුරු ලියන්න

திருகோணமலை நகரத்தில் இருந்து 13 கிலோ மீட்டர் தூரத்தில் நிலாவெளி என்ற கிராமம் அமைந்துள்ளது .நிலாவெளிக்கடற்கரை மிகவும் அழகானது .மிக அழகிய கடற்கரைகளுள் நிலாவெளி கடற்கரையும் ஒன்றாகும். அதில் நீலபச்சை நிறக் கம்பளம் விரித்தாற் போலக் காட்சி அளிக்கும் .சுற்றுலா பயணிகளை கவர்ந்த பிரதேசமாகும். இந்த இடம் சூரியக்குளியல், படகு பயணம் மற்றும் நீச்சல் ஆகியவற்றுக்கு மிகச்சிறந்த இடமாகும்.

போர்த்துக்கேயர் ஆட்சியின் நினைவாக பிரட்ரிக் கோட்டை இன்றும் நகர மத்தியில் காணப்படுகிறது. இந்த கோட்டைக்குள் இந்துக்களின் திருக்கோணேஸ்வர ஆலயம் அமைந்துள்ளது. அங்கு செல்லும் வழியில் புள்ளி மான் கூட்டம் துள்ளித் துள்ளி விளையாடும். இது காண்போர் மனதை மயக்கும் இனிய காட்சியாகும்.

1. நிலாவெளி கிராமம் திருகோணமலையில் இருந்து எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது?
2. நிலாவெளி கடற்கரை எப்படியானது?
3. நிலாவெளி கடற்கரை எவ்வாறு காட்சியளிக்கும்?
4. இந்த இடம் எவற்றுக்கு சிறப்பானது?
5. திருக்கோணேஸ்வர ஆலயம் எங்கு அமைந்துள்ளது?